# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 384/2016/

ஆணை எண் .247/2017/நாள்.23 –10–2017

**திரு. வி. திருப்பதி,**
**3–3–5 லாலா நாயக்கன் தெரு,**
**தாதம்பட்டி,**
**வாடிப்பட்டி பேரூராட்சி,**
**மதுரை மாவட்டம்** — முறையீட்டு மனுதாரர்

**திரு எஸ். பாண்டி,**
**பேரூராட்சி ஒப்பந்தக்காரர்,**
**வாடிப்பட்டி மற்றும் நால்வர்.** — **எதிர் மனுதாரர்கள்**

## ஆணை

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சியினைச் சேர்ந்த திரு வி.திருப்பதி, தாதம்பட்டி என்பவரின் 07.12.2015 ம் நாளிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 15460/2015/இ.2/நாள் 27.04.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 06.05.2016ல் பெறப்பட்டு 0384/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி முன்னாள் தலைவர் திருமதி பா. கிருஷ்ணவேணி பாண்டியன் மற்றும் அவர்களின் மகன் திரு மு.பா.பிரகாஷ் ஆகியோர் மீது பேரூராட்சியின் பணிகள் தொடர்பாக முறைகேடுகள் எனக் குறிப்பிட்டு விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல் ) விதிகள் 2015 விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு நிதிமன்றக் வில்லைக் கட்டணம் ரூ 10/–க்கு ஒட்டப்பட்டு உரிய படிவம் 1 ல் பூர்த்தி செய்து

சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 384/2016/பே/நாள் 12.05.2016 மற்றும் 08.07.2016 ஆகிய தேதிகளில் அறிவிப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் நாளது தேதி வரை தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற அழைப்பாணை எண் 384/2016/பே/நாள் 02.12.2016ன்படி முறையீட்டு மனுதாரர் தனது தரப்பிலான விளக்கங்களை நேரில் எடுத்துரைக்கும் வண்ணம் இம்முறைமன்ற நடுவத்தில் 11.01.2017ம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க கோரப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் அன்றைய தினம் நேரில் ஆஜராகாததோடல்லாமல். தான் ஆஜராகாமல் இருந்தமைக்கான எந்தவிதமான விளக்கத்தினையும் இன்று வரை அளிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்களுக்கு மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கம் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 384/2016/பே/நாள் 03.12.2016ன் மூலம் அறிவிப்பாணை அனுப்பப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், வாடிப்பட்டி தனது கடித எண்.306/2016/நாள் 26.12.2016ன் மூலம் முறையீட்டு மனுதாரரின் புகார்களுக்கான விளக்கங்களை அளித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரருக்கு முறையீட்டு மனுவினை உரிய முறையில் விதிகளின்படி சமர்ப்பிக்ககோரி இரு அறிவிப்பாணைகள் வழங்கியும் மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்காத நிலையில், கூடுதல் வாய்ப்பாக அவர் தரப்பிலான விளக்கங்களை தெரிவிக்க நேரில் ஆஜராக அழைப்பாணை அனுப்பியும் முறையீட்டு மனுதாரர் நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்கத் தவறியுள்ளார். எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தரப்பில் கூறிக்கொள்ள ஏதுமில்லை எனக் கருதி, முறையீட்டு மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி-அனுப்பப்படுகிறது//-

செயலாளர்

பெறுநர்

1.திரு. வி. திருப்பதி,
3-3-5 ஏாலா நாயக்கன் தெரு,
தாதம்பட்டி,
வாடிப்பட்டி பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வாடிப்பட்டி பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.